**ஜனவரி – 16**

# TNPSC துளிகள்

- மத்திய அமைச்சரவையானது வருமான வரித்துறையின் மையப்படுத்தப்பட்ட செயலாக்க மையம் 2.0 என்ற திட்டத்தையும் ஒருங்கிணைந்த மின்னணு முறையில் தாக்கல் செய்யும் திட்டத்தையும் ஏற்படுத்த தனது ஒப்புதலை வழங்கியிருக்கின்றது.
- மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளரான 38 வயது நிரம்பிய K. தான்யா சணல் கேரளாவின் இரண்டாவது உயரமான சிகரமும் ஒரு பல்லுயிர்ப் பெருக்கத்தன்மை கொண்ட முக்கிய இடமுமான அகஸ்தியர் கூடம் சிகரத்தை அடைந்த முதல் பெண்மணி ஆகியுள்ளார்.
- இந்திய அமெரிக்கரான ராஜா கிருஷ்ணமூர்த்தி நுண்ணறிவுப் பிரிவுக்கான பாராளுமன்ற குழுவின் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டு இருக்கின்றார். இதன்மூலம் அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பைப் பலப்படுவதற்கென்று அமைக்கப்பட்ட ஒரு சக்தி வாய்ந்த குழுவில் பணியமர்த்தப்பட்ட முதல் தெற்காசிய நபராக அவர் ஆகியுள்ளார்.
- தமிழ்நாட்டின் D. குகேஷ் தனது 12 வருடங்கள் 7 மாதங்கள் மற்றும் 17 நாட்கள் என்ற வயது நிலையில் உலகின் இரண்டாவது இளைய கிராண்ட் மாஸ்டராகவும் இந்தியாவின் மிக இளைய வயது கிராண்ட் மாஸ்டராகவும் சாதனை படைத்துள்ளார். குகேஷ் இந்த சாதனையை தனது சக மாநிலத்தவரான R. பிரக்னனானந்தா என்பவரது சாதனையை வீழ்த்தி முத்திரைப் பதித்துள்ளார்.
  - செர்கே கர்ஜாகினுக்குப் பிறகு உலகில் இரண்டாவது இளைய கிராண்ட் மாஸ்டர் தற்சமயம் குகேஷ் ஆவார்.
- காமன்வெல்த் போட்டிகளில் குத்துச்சண்டைப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்தியாவின் முதல் வீரரான முகமது அலி காமர் இந்தியப் பெண்கள் குத்துச் சண்டை அணியின் தலைமைப் பயிற்சியாளராகப் பதவியேற்று இருக்கின்றார்.
  - இவர் மிகப்பெருமை வாய்ந்த சிவ் சிங் என்பவருக்குப் பதிலாக பதவியேற்கின்றார்.
- இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோலியும் பயிற்சியாளர் ரவி சாஸ்திரியும் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 11-ம் தேதி கிரிக்கெட் விளையாட்டிற்கான தமது பங்களிப்பிற்காக சிட்னி கிரிக்கெட் மைதானத்தின் கவுரவ உறுப்பினர் தகுதியைப் பெற்றனர்.
- மாசிடோனியக் குடியரசின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் நாட்டின் பெயரை வடக்கு மாசிடோனியக் குடியரசு என்று மாற்றிட வாக்களித்தனர். இந்த வாக்கெடுப்பு தற்சமயம் கிரீஸ் நாட்டின் பாராளுமன்ற ஒப்புதலுக்காக காத்திருக்கின்றது.

# தமிழ்நாடு செய்திகள்

## சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையம்

- 2010 ஆம் ஆண்டு நவம்பர் 27-ம் தேதியன்று ஆளுநரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்று எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு இறுதியாக சென்னை ஒருங்கணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையத்தின் (Chennai Unified Metropolitan Transport Authority- CUMTA)

சட்டமும் அதனோடு தொடர்புடைய விதிமுறைகளும் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன.

- சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் தலைமை நகரத் திட்டமிடும் அதிகாரி (போக்குவரத்து) இந்த சென்னை ஒருங்கிணைந்தப் பெருநகரப் போக்குவரத்து ஆணையத்தின் தலைமை செயல் அதிகாரியாக செயல்படுவார். அவரது கட்டுப்பாட்டின் கீழ் இந்த குழுமம் செயல்படும்.
- போக்குவரத்துத் துறையில் நுட்பம் வாய்ந்தவர், நகரப் போக்குவரத்துத் துறையில் திட்டமிடுதல், மேலாண்மை, செயல்பாடுகள், இயந்திரவியல் பொருளாதாரம் மற்றும் அது தொடர்பான விவகாரங்களில் அனுபவமும் அறிவும் கொண்ட நிபுணர் ஆகியோர் இக்குழுவில் அரசால் நியமிக்கப்படுவர்.

## இயந்திர காவல்துறை பணியாள் 'Rodeo'

- வேப்பேரியில் உள்ள சென்னைப் போக்குவரத்து காவல்துறை அலுவலகத்தில் உள்ள சாலைப் பாதுகாப்பு காட்சிக் கூடத்தில் சென்னை மாநகர காவல்துறை ஆணையரால் ரோடியோ (Rodeo) என்ற இயந்திர காவல்துறை பணியாள் ரோபோ துவக்கி வைக்கப்பட்டது.
- SP ரோபோட்டிக் வொர்க்ஸ் என்ற குழுமத்திலிருந்து 23 குழந்தைகள் அடங்கிய ஒரு அணி இந்த ரோபாவை வடிவமைத்திருக்கின்றது.
- இந்த ரோபோ பார்வையாளர்களைச் சந்திக்கும் வகையில் சுழன்று வருவது மற்றும் சாலைப் பாதுகாப்பு தொடர்பான தவல்களை அளிப்பது போன்ற பலதரப்பட்ட செயல்களைச் செய்யும்.

## தமிழ்நாடு பாதுகாப்புத் தொழிற்சாலை வழித்தடம்

- ஜனவரி 20-ம் தேதியன்று மத்திய அரசு தமிழ்நாட்டில் பாதுகாப்புத் தொழிற்சாலை வழித்தடம் ஒன்றைத் துவங்க இருக்கின்றது.




- தமிழ்நாடு பாதுகாப்புத் தொழிற்சாலை வழித்தட மையமானது சென்னை, ஒசூர், கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சி ஆகிய பகுதிகளை இணைக்கும்.

- 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் உத்தரப்பிரதேச மையம் துவக்கி வைக்கப்பட்டு 3732 கோடி ரூபாய் அளவிற்கு முதலீட்டு அறிவிப்புகள் செய்யப்பட்டதை அம்மாநிலம் கண்டது.

# தேசியச் செய்திகள்

## 103வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்

- குடியரசுத் தலைவர் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 12-ம் தேதி பொருளாதார ரீதியில் பின்தங்கிய சமூகத்தினருக்கு 10 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளிக்கின்ற 124வது அரசியலமைப்புத் திருத்த மசோதாவிற்கு (தற்சமயம் 103வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்) தனது ஒப்புதலினை அளித்திருக்கின்றார்.
- மத்திய சமூக நீதி மற்றும் மேம்பாட்டுத்துறை அமைச்சர் தாவர்சந்த் கெலாட் மக்களவையில் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் தேதியன்று இட ஒதுக்கீட்டு மசோதாவை அறிமுகம் செய்தார். இம்மசோதா 323 ஆதரவு வாக்குகளும் வெறும் 3 எதிர்ப்பு வாக்குகளும் பெற்று நிறைவேற்றப்பட்டது.
- மாநிலங்களவையும் இம்மசோதாவை 2019 ஆம் ஆண்டு ஜனவரி 09 ஆம் தேதியன்று 165 ஆதரவு வாக்குகளோடும் 07 எதிர்ப்பு வாக்குகளோடும் நிறைவேற்றியது.

## பிரதான் மந்திரி ராஷ்டிரீய பால் புரஸ்கார் 2019

- குழந்தைகளுக்கான தேசிய விருதுகள் என்பது பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய பால் புரஸ்கார் என சீரமைக்கப்பட இருக்கின்றது. இது சாகச விருதுகள் பிரிவையும் உள்ளடக்கியதாக இருக்கும்.
- கடந்த ஆண்டு வரையில் தேசிய சாகச விருதுகள் பிரிவு "குழந்தைகள் நலனிற்கான இந்தியக் குழுமம்" என்ற அரசு சாரா அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டன.
- 2019 ஆம் ஆண்டு பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய பால் புரஸ்கார் என்ற விருதிற்காக மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைச்சகம் 26 நபர்களை வரிசைப்படுத்தியுள்ளது.
- இந்த விருதுகள் குடியரசுத் தினத்தோடுத் தொடர்புடைய ஒரு நிகழ்ச்சியில் ஜனவரி 22-ம் தேதியன்று இந்திய குடியரசுத் தலைவரால் வழங்கப்படும்.
- சாகசப் பிரிவைத் தவிர இதரப் பிரிவுகளில் உள்ள குழந்தைகளுக்கு முன்னர் குழந்தைகள் தினத்தன்று தேசிய விருதுகள் வழங்கப்பட்டன.

## போதைப் பொருள் தேவையைக் குறைப்பதற்கான தேசிய செயல்திட்டம் (2018-2023)

- மத்திய சமூக நலத்துறை மற்றும் மேம்பாட்டு அமைச்சகம் நாட்டில் போதைப் பொருள் விவகாரத்தையும் அதன் தவறான உபயோகத்தையும் சரிசெய்வதற்காக 5 வருட செயல்திட்டத்தை வரைவு செய்திருக்கின்றது.
- இது அப்பிரச்சினைகளை சரி செய்வதற்காக பல்நோக்கு யுக்திகளை செயல்படத்திட

எண்ணுகின்றது.

- இந்த யுக்திகள் கல்வி, விழிப்புணர்வு, போதைப் பழக்கத்திலிருந்து மீட்பது, போதைப் பொருட்களால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் மறுவாழ்வு ஆகியவற்றை உள்ளடக்கியது.

## பிரதான் மந்திரி ரோஜ்கார் புரோத்சகான் யோஜனா

- வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கான மத்திய அரசின் தனித்துவ திட்டங்களில் ஒன்றான பிரதான் மந்திரி புரோத்சகான் யோஜனா 2019-ம் ஆண்டு ஜனவரி 14-ம் தேதி அதன் பயனாளிகளின் எண்ணிக்கையில் ஒரு மிகப்பெரிய மைல்கல்லான ஒரு கோடி என்ற எண்ணிக்கையைக் கடந்திருக்கின்றது.
- இத்திட்டம் 2016-ம் அண்டு ஆகஸ்டு மாதம் 7-ம் தேதியன்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் தொழிலாளர்களின் சேமநல நிதி நிறுவனத்தின் (Employees' Provident Fund Organization - EPFO) மூலமாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகத்தால் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
- இத்திட்டத்தின் நேரடியான பயன் என்பது யாதெனில் இத்திட்டத்தின் பயனாளிகளான தொழிலாளர்கள் சேமநல நிதி, ஓய்வூதியம் மற்றும் மரணத்தோடு தொடர்புடைய காப்பீடு ஆகியவற்றின் மூலம் சமூகப் பாதுகாப்பு நன்மைகளை அடைய முடியும்.

# மாநிலச் செய்திகள்

## பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கான 10 சதவிகித இட ஒதுக்கீடு

- பாராளுமன்றத்தில் 10 சதவிகித இடஒதுக்கீட்டு மசோதா நிறைவேற்றப்பட்ட சில நாட்கள் கழித்து, குஜராத் மாநில அரசு, தனது மாநில அரசு வேலை வாய்ப்புகள் மற்றும் கல்வியில் 2019 ஆம் அண்டு ஜனவரி 14-ம் தேதி முதல் பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்காக திருத்திய இடஒதுக்கீட்டுச் சட்டத்தை அமல்படுத்தியிருக்கின்றது.
- இதன்மூலம் புதிய விதிகளை செயல்படுத்தும் நாட்டின் முதலாவது மாநிலமாக குஜராத் உருவெடுத்துள்ளது.
- குஜராத்தையடுத்து, நாட்டில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு 10 சதவிகித இடஒதுக்கீட்டை அமல்படுத்தும் இரண்டாவது மாநிலமாக தெலுங்கானா இருக்கின்றது.

## ஜெய் கிசான் ரின் முக்தி யோஜனா

- மத்தியப் பிரதேச முதல்வர் கமல்நாத் தனது அரசின் "ஜெய் கிசான் ரின் முக்தி யோஜனா" என்ற பெயர் கொண்ட 50000 கோடி ரூபாய் அளவிற்கான விவசாயக் கடன் தள்ளுபடித் திட்டத்தைச் செயல்படுத்தியிருக்கின்றார்.
- மாநில அமைச்சரவையானது 55 லட்சம் விவசாயிகளின் பயிர்க்கடனை தள்ளுபடி செய்வதற்கு தனது ஒப்புதலையும் கடன் தள்ளுபடிக்கான அதிகபட்ச வரம்பு தேதியை

2018-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதியிலிருந்து 2018-ம் ஆண்டு டிசம்பர் 12-ம் தேதி வரைக்கும் நீட்டிப்பதற்கான தனது ஒப்புதலையும் அளித்துள்ளது.

# முக்கிய தினங்கள்


## இந்திய ராணுவ தினம் - ஜனவரி 15

- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 15-ம் தேதியன்று இந்திய ராணுவம் தனது 71வது ராணுவ தினத்தைக் கொண்டாடியது.
- ஒவ்வொரு வருடமும் இந்திய இராணுவம் ஜனவரி 15-ம் தேதியை ராணுவ தினமாக அனுசரிக்கின்றது. ஜெனரல் (பின்னாளில் பீல்டு மார்ஷல்) K.M. கரியப்பா 1949-ம் ஆண்டில் கடைசியான பிரிட்டிஷ் தலைமை படைத் தளபதியான ஜெனரல் சர் F.R.R. பக்சர் என்பவரிடமிருந்து ராணுவத்திற்கான தலைமை கட்டுப்பாட்டைப் பெற்ற தினத்தைக் குறிப்பதற்காக இந்திய இராணுவம் அதனை ராணுவ தினமாக அனுசரிக்கின்றது.
- சுதந்திரத்திற்குப் பிறகான இந்திய ராணுவத்தின் முதல் தலைமை படைத் தளபதி ஜெனரல் கரியப்பா ஆவார்.

# இதரச் செய்திகள்

## எரிமலை சிகரங்கள் மீது ஏறிய உலகின் இளைஞர்

- 35 வயதான மலையேற்ற வீரரான சத்யரூப் சித்தாந்தா அண்டார்டிகா கண்டத்தின் உயர்ந்த சிகரமான சிட்லீ சிகரத்தின் மீது ஏறியிருக்கின்றார்.




- இதனுடன் இவர் உலகின் ஏழு உயரமான எரிமலைச் சிகரங்கள் மீது ஏறிய உலகின் மிக இளைய மனிதராக உருவெடுத்து உள்ளார்.
- இவர் ஆப்பிரிக்காவில் கிளிமாஞ்சாரோ, ஐரோப்பாவில் எல்ப்ரஸ், அலாஸ்காவில் டெனாலி மற்றும் பிரான்சில் உள்ள மான்ட் பிளாங்க் போன்ற பல்வேறு சிகரங்களின் மீது ஏறிய சாதனையை கைவசம் வைத்திருக்கின்றார்.

- - - - - - - - - - - - - - -